

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு:83 – ஒலி:103 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 07 – வெள்ளிக்கிழமை 22 நவம்பர் 2024 – திருச்சி ★★ 12+8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:83 - Issue 103 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 07 - Friday 22 November 2024 - Trichy ★★ 12+8 Pages ₹5.00


### சொல்லாததையும் நிறைவேற்றி - வளமான தமிழ்நாட்டை உருவாக்கியுள்ளோம் ! எனவே மக்களின் பேராதரவோடு

# 2026ஆம் ஆண்டிலும் கழக ஆட்சியை மலர வைப்போம்!

## ஏழாவது முறையும் ஏற்றம் காண தேர்தல் பரப்புரையை இன்றே தொடங்கிடுக!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற உயர்நிலை செயல்திட்டக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, நவ. 22 -**

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கழக உயர்நிலை செயல் திட்டக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், “சொல்லாததையும் நிறைவேற்றி, வளமான தமிழ்நாட்டை உருவாக்கியுள்ளோம்; எனவே மக்களின் பேராதரவோடு 2026 ஆண்டிலும் கழக ஆட்சியை மலர வைப்போம்” என்றும் “ஏழாவது முறையும் ஏற்றம் காண தேர்தல் பரப்புரையை இன்றே தொடங்கிடுவோம்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (20.11.2024) தி.மு.க. உயர்நிலைச் செயல்திட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:-




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.11.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகத்தின் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் மற்றும் மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**தீர்மானம் : 1**

**தலைவருக்கு வாழ்த்து - பாராட்டு!**

மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம் – மகளிருக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் – புதுமைப் பெண் – தமிழ்ப் புதல்வன் - நான் முதல்வன் – மக்களைத் தேடி மருத்துவம் - நம்மைக் காக்கும் 48 - பள்ளி மாணவ, மாணவியருக்கு தினமும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் – குழந்தைகளுக்கு ‘ஊட்டச் சத்தை உறுதி செய் திட்டம்’ - கலைஞர் நூற்றாண்டு நூலகம் - கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை – பெருந்தலைவர் காமராஜர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம் – பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் - அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் என இந்தியாவுக்கே முன்மாதிரியான முத்திரை பதிக்கும் திட்டங்களை நிறைவேற்றித் தந்து திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியானது அனைத்து வகையிலும் தமிழ்நாட்டைப் பாழ்படுத்தியிருந்த நிலையை, சீர் செய்தது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டை சிறப்புமிகு மாநிலமாக உயர்த்திக் காட்டி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். மக்கள் நலத்திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், அனைத்து மாவட்டத் தொழில் வளர்ச்சிக்கு வித்திடும் புதிய தொழிற்சாலைகள், புதிய வேலைவாய்ப்புகள் எனத் தேர்தல் வாக்குறுதியில், சொன்னதை எல்லாம் கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் அடுத்தடுத்து நிறைவேற்றி – மக்களுக்காகவே, மக்கள் அரசை நடத்தி வரும் நிர்வாகத் திறமைமிக்க தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவருக்கு இந்த உயர்நிலைச் செயல்திட்டக் குழு தனது பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கையையும் செவிமடுத்து, பார்த்துப் பார்த்துத் திட்டங்களை நிறைவேற்றும் முதலமைச்சராகவும், அதேநேரத்தில் – கோட்டையில் இருந்து ஆட்சி செய்தால் மட்டும் போதாது என மாவட்டந்தோறும் நேரடிக் களஆய்வினைத் துவக்கி இந்தியாவுக்கே எடுத்துக்காட்டான முதலமைச்சராகச் செயல்பட்டு வருகிறார்.

மேலும், மாவட்டரீதியாக கழகப் பணிகளையும் மாவட்டம்தோறும் நேரில் சென்று ஆய்வு செய்து வருகிறார் நம் தலைவர். கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து அவர்களது எண்ணங்களை அறிந்தும், தனது கருத்துகளைப் பகிர்ந்தும் வருகிறார். இப்படி ஒரே நேரத்தில் ஆட்சிப் பணியையும், கட்சிப் பணியையும் செவ்வனே செய்து வரும் திராவிட நாயகர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இந்த உயர்நிலைத் செயல்திட்டக் குழு மனமாரப் பாராட்டுகிறது.

**தீர்மானம் : 2**

**நிதி வழங்குவதில் பாராமுகம் - ஒன்றிய அரசுக்குக் கண்டனம்!**

தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளைப் புறந்தள்ளி இந்தி மாதம் - வாரம் என விழா எடுப்பது, நாடு முழுவதும் வலியுறுத்தப்பட்டு வரும் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை மேற்கொள்ளாமல் காலந்தாழ்த்துவது, சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் வக்ப் வாரிய திருத்தச் சட்டம், நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான ஒரே நாடு – ஒரே தேர்தல், மக்கள் உயிரைப் பறிக்கும் தொடர் இரயில் விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதது, சமக்ர சிக்ஷா போன்ற திட்டங்களின்கீழ் மாநில அரசுக்கு வரவேண்டிய நிதியை விடுவிக்காமல் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பாதிப்புக்குள்ளாக்குவது, அரசியல் சட்டம் அளித்துள்ள மாநிலங்களுக்கான அதிகாரங்களையும் அபகரிப்பது, அவசர கதியில் கொண்டு வந்த மூன்று குற்றவியல் சட்டங்கள், நிதி ஒதுக்கீட்டில் - பேரிடர் நிதி வழங்குவதில் பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகளிடம் காட்டும் பாராமுகம், ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் விதமாக நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு நிதி குறைப்பு, இளைஞர்களைத் திண்டாட வைக்கும் 9.2 விழுக்காட்டிற்கு மேலான வேலைவாய்ப்பின்மை, பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் இடஒதுக்கீட்டு உரிமையை நீர்த்துப் போக வைக்கும் வகையில் மண்டல் ஆணையப் பரிந்துரையின் அடிப்படையில் வழங்கப்பட்ட இடஒதுக்கீட்டினை ஒன்றிய அரசின் அனைத்துத் துறைகளிலும் முழுமையாகச்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## தமிழ்நாட்டை மேம்படுத்தி வரும் முதலமைச்சருக்குப் பாராட்டு!

**மக்களுக்காகவே, மக்கள் அரசை நடத்தி வரும் நிர்வாகத் திறமைமிக்க தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவருக்கு இந்த உயர்நிலைச் செயல்திட்டக் குழு தனது பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது. ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கையையும் செவிமடுத்து, பார்த்துப் பார்த்துத் திட்டங்களை நிறைவேற்றும் முதலமைச்சராகவும், அதேநேரத்தில் - கோட்டையில் இருந்து ஆட்சி செய்தால் மட்டும் போதாது என மாவட்டந்தோறும் நேரடிக் கள ஆய்வினைத் துவக்கி இந்தியாவுக்கே எடுத்துக்காட்டான முதலமைச்சராகச் செயல்பட்டு வருகிறார். மேலும், மாவட்ட ரீதியாக கழகப் பணிகளையும், மாவட்டம்தோறும் நேரில் சென்று ஆய்வு செய்து வருகிறார் நம் தலைவர். கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து அவர்களது எண்ணங்களை அறிந்தும், தனது கருத்துகளைப் பகிர்ந்தும் வருகிறார். இப்படி ஒரே நேரத்தில் ஆட்சிப் பணியையும், கட்சிப் பணியையும் செவ்வனே செய்து வரும் திராவிட நாயகர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இந்த உயர்நிலைத் செயல்திட்டக் குழு மனமாரப் பாராட்டுகிறது.**

### நீதிக் கட்சியின் வாரிசுகளாய்

## நமது உரிமைகளை மீட்டெடுத்து நிலைநாட்டுவோம்!

### நீதிக்கட்சி உருவான நாளையொட்டி தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, நவ. 22 -**

**இன்றைய திராவிட மாடலுக்குப் பாதை அமைத்த நீதிக் கட்சி உருவான நாளையொட்டி தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில், “உரிமை மறுக்கப்பட்ட மக்களின் குரலாய்ப் பிறந்த நீதிக் கட்சியின் வாரிசுகளாய், நமது உரிமைகளை மீட்டெடுத்து நிலைநாட்டிடுவோம். வென்றிடுவோம்!” எனக் குறிப்பிட்டுள்ளார்.**

நீதிக்கட்சி உருவான நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எனும் உரிமையை வழங்கிச் சமூகநீதிப் புரட்சி, இலவசக் கட்டாயக் கல்வி மற்றும் காலை உணவுத் திட்டத்தை முன்னோடியாகத் தொடங்கிக் கல்விப் புரட்சி, இந்து சமய அறநிலையச் சட்டம் மூலம் சமத்துவப் புரட்சி என நூறாண்டுகளுக்கு



முன்பே இன்றைய திராவிட மாடலுக்குப் பாதை அமைத்த நீதிக்கட்சி உருவான நாள் இன்று!

உரிமை மறுக்கப்பட்ட மக்களின் குரலாய்ப் பிறந்த நீதிக் கட்சியின் வாரிசுகளாய், நமது உரிமைகளை மீட்டெடுத்து நிலைநாட்டும் பயணத்தில் உழைப்பைச் செலுத்திடுவோம்! வென்றிடுவோம்!

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மகாராஷ்டிரா - ஜார்க்கண்ட் மாநிலங்களில் விறுவிறுப்பான வாக்குப் பதிவு!

*மும்பை, நவ. 22-*

*மகாராஷ்டிராவில் மொத்தமுள்ள 288 சட்டப்பேரவை தொகுதிகளிலும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு தொடங்கி நேற்று முன்தினம் நடைபெற்றது.*

*மாநிலம் முழுவதும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.*

*வாக்குச்சாவடிகளுக்கு மக்கள் ஆர்வத்துடன் வருகை தந்து வாக்களித்தனர்.*

*பாராமதி சட்டமன்றத் தொகுதியில், தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே தனது வாக்கினை செலுத்தினார்.*

*மும்பையில், ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தனது வாக்கினை செலுத்தினார்.*

*முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் தெண்டுல்கர், பாலிவுட் நடிகர் அக்ஷய்குமார் உள்ளிட்டோரும் வாக்களித்தனர்.*

**ஜார்க்கண்ட்!**

*இதேபோல், ஜார்க்கண்ட் மாநிலத்திற்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.*

*ஜார்க்கண்டில் மொத்தமுள்ள 81 சட்டப்பேரவை தொகுதிகளில், 43 தொகுதிகளுக்கு கடந்த 13ம் தேதி வாக்குப்பதிவு நடந்து முடிந்தது.*

*எஞ்சிய 38 தொகுதிகளிலும் இரண்டாவது கட்டமாக பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு நடைபெற்றது.*

*நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் மகாராஷ்டிராவில் 59 சதவிகிதமும், ஜார்க்கண்டில் 68 சதவிகிதமும் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன.*

*மகாராஷ்டிரா மற்றும் ஜார்க்கண்ட் தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 23ஆம் தேதி எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளது.*

**உத்தரபிரதேசம்!**

*இந்நிலையில், உத்தர பிரதேசத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில், இஸ்லாமியர்களை வாக்களிக்க விடாமல் தடுக்கும் காவல்துறையினரைக் கண்டித்து பல்வேறு இடங்களில் பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*அப்போது, முசாபர் நகர், மீராப்பூர் உள்ளிட்ட இடங்களில் கல்வீச்சு சம்பவங்கள் நடைபெற்றன.*

*இதனையடுத்து காவல்துறையினர், அவர்கள் மீது தடியடி நடத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.*